**கண்டி கடவத் சதர மற்றும் கங்கவட்ட கோரளே பிரதேச சபை - 2022**

------------------------------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கண்டி கடவத் சதர மற்றும் கங்கவட்ட கோரளே பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த வருமானச் செலவினக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கண்டி கடவத் சதர மற்றும் கங்கவட்ட கோரளே பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான

ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் சபை சம்பந்தமான 28 வழக்குகள் நடைமுறையில் இருந்தாலும் அவை தொடர்பாக நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் சரி செய்வேன் என | வழக்குகள் தொடர்பாக நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபைக்குச் சொந்தமான ரூபா. 380,960 பெறுமதியான தென்னேகும்புர காலேவத்தை மயானத்திற்குச் சொந்தமான காணி,பெறுமதி இனங்காணப்பட முடியாத அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள காணிகள் மற்றும் 03 கட்டிடங்கள் மற்றும் பிரை லேண்ட்ஸ்நிறுவனத்தின் மூலம் பொதுத் தேவைகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 100,000 பெறுமதியான பிச்சமல்வத்த காணி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுகளில் உள்ளடக்குவதாக | காணிகட்டிடங்கள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் கட்டிடங்கள் அமைப்பதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா. 1,560,529 மூலதனமாக் கப்பட்டிருக்கவில்லை. | 2023ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுகளில் உள்ளடக்குவதாக | கட்டட நிர்மாணச் செலவுகள் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | சுற்றாடல் அதிகார சபையின் அனுமதி இதுவரை கிடைக்கப்பெறாத கழிவு முகாமைக்கான ஒரு காணியைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா. 26,000,000 பெறுமதியான தொகை கடன் கொடுத்தோரி கணக்கில் 04 வருடங்களாகக் காட்டப்பட்டு வந்துள்ளது. | எதிர்வரும் ஆண்டில் சரி செய்வேன் என | கணக்குகள் சீர் செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் குத்தகை வாடகை வருமானம் ரூபா. 210,350, நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா. 628,022 மற்றும் மூலதன வருமானம் ரூபா. 139,000 வருமானச் செலவுக் கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் கணக்குக் குறிப்புகள் மூலம் சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுப்பதாக | வருமானங்கள் கணக்கிடப்படல் வேண்டும். |

### 1.6.3 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | விடயம் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுகளில் குறிப்பிடப்பட்டுள்ள 03 சொத்துத் விடயங்கள் மற்றும் ஒரு பொறுப்பு விடயத்துடன் தொடர்புபட்ட மீதிகள் அதனுடன் தொடர்பான அட்டவணைகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையிலான மீதிகளுடன் ஒப்பிடுகையில் ரூபா. 10,565,967 இணங்காமை காணப்பட்டது. | 2023ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுகளில் உள்ளடக்குவதாக | வித்தியாசங்கள் இனங்காணப்பட்டு கணக்கு மீதிகள் சீர் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31ஆம் திகதியன்று பெற வேண்டிய வீத வரி வருமானக் கணக்கின் அடிப்படையில் ரூபா. 17,738,021 ஆக இருந்ததுடன், கணினி மென்பொருள் அடிப்படையில் பெற வேண்டிய வீத வரி வருமானம் ரூபா. 18,765,312 ஆகவிருந்ததன் காரணமாக ரூபா. 1,027,291 வித்தியாசம் காணப்பட்டது. | 2023ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுகளில் உள்ளடக்குவதாக | வித்தியாசங்கள் இனங்காணப்பட்டு கணக்கு மீதிகள் சீர் செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31ஆம் திகதியன்று பொருட் கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான 02 நூலகங்களில் உள்ள புத்தகங்களின் பெறுமதி ரூபா. 4,584,107 ஆக இருந்த போதும்,கணக்கின் பிரகாரம் அது ரூபா. 4,310,027 ஆக இருந்தமையால் ரூபா. 273,080 வித்தியாசம் காணப்பட்டது. | 2023ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுகளில் உள்ளடக்குவதாக | கணக்கு மீதிகள் சீர் செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | நகர அபிவிருத்தி அதிகார சபை முதலீட்டுக் கணக்கு மீதிரூபா. 11,625,544 மற்றும் நகர அபிவிருத்தி வைப்புக் கணக்கு மீதிரூபா. 14,067,336 ஆகவிருந்ததுடன்,ரூபா. 2,441,792 வித்தியாசம் காணப்பட்டது. | இவ் வித்தியாசம் தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் கலந்துரையாடி அதனை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சீர் செய்யப்படல் வேண்டும். |

### 1.6.4 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அனுமதி பெறப்படாது நாளாந்த வேதன அடிப்படையில் 7 ஊழியர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டு 2022 ஜனவரி முதல் ஒக்டோபர் வரை ரூபா. 1,948,156 சம்பளம் வழங்கப்பட்டிருந்தது. | குறித்த இணைப்புகளுக்காக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கான அனுமதி வழங்கப்படவில்லை. இதன் காரணமாக நிறுவனத்தில் காணப்படுகின்ற பதவி அவசியத்தினை அடிப்படையாகக் கொண்டு இவ்வூழியர்கள் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டனர் என | அனுமதியின் பிரகாரம் ஊழியர்கள் இணைத்துக்கொள்ளப்படல் வேண்டும். |

### 1.6.5 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் காணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் ரூபா 2,367,728 ஆன கடன்பட்டோர் மீதிக்குரிய அட்டவணை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | இம்மீதி தொடர்பாக பரீட்சித்து சரியான தகவல் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு தேவையானபதிவேடுகள் செல்லப்பட வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| **(i)** | பிரிவு 127 | சபைக்குச் சொந்தமான 08 மயானங்கள் மாத்திரம் இனங்காணப்பட்டிருந்ததுடன், அவையும் வர்த்தமானி அறிவித்தல் மூலம் கையேற்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான மயானங்கள் தொடர்பான தகவல்கள் சொத்துக்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், வர்த்தமானி அறிவித்தலின் பின்னர் கையேற்பதற்கான நடவடிக்கை எடுப்பேன் என | சபைக்குச் சொந்தமான மயானங்களை கையேற்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| **(ii)** | பிரிவு 154(1) | பிச்சமல்வத்த எனும் காணியின் வரைபடம் அனுமதிக்கப்பட்டு 2022 பெப்பரவரி 29 ஆம் திகதி இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்ததுடன், 01 வீத வருமானம் ரூபா. 2,864,983 பெறப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக குறித்த நிறுவனத்திற்கு அறிவித்து குறித்த தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுப்பதாக | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாகநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| | நிதிப் பிரமாணம் 104(4) | 2017 – 2020 காலப்பகுதியில் 05 சந்தர்ப்பங்களில் சபைக்குச் சொந்தமான 03 வாகனங்களின் ரூபா. 1,672,654 நட்டம் தொடர்பாக தொடர்புடைய நிதி பிரமாணங்களுக்கு அமைவாக பயன்படுத்தப்படவில்லை. | இறுதி அறிக்கையைப் பெறுவதற்காக உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும், இதுவரை குறித்த அறிக்கை பெறப்படாததன் காரணமாக, மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளதென | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 1988 ஆகஸ்ட் 23 ஆம் திகதிய 520/07 இலக்க 1952 இன் 06ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களால் அனுமதிக்கப்பட்ட இடைக்கால சட்டக்கோவையின் 39 ஆம் பிரிவு | சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் காட்சிப்படுத்தப்படும் விளம்பரப் பலகைகளுக்காக மீளாய்வாண்டில் 17 நிறுவனங்களின் 50 விளம்பரங்களுக்காக ரூபா. 260,400 அறவிடப்பட்டிருக்கவில்லை. | குறித்த நிறுவனங்களுக்கு எழுத்து மூலம் அறிவித்து எதிர்காலத்தில் நிலுவைத் தொகையினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுப்பேன் என. | வருடந்தோறும் விளம்பரப் பலகைகள் தொடர்பாக ஆய்வு செய்து வருமானம் அறவீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | 2009 ஏப்ரல் 16ஆம் திகதிய மற்றும் 09/2009 இலக்க அரச நிருவாக சுற்றுநிரூபத்தின் பந்தி 02 iv | வருகை மற்றும் வெளியேறுதலை கைவிரல் அடையாள இயந்திரம் அல்லது வரவுப் பதிவீடு ஆவணத்தின் அடிப்படையில் வெளியேறுதலை உறுதி செய்யாது மீளாய்வாண்டில் 07 அதிகாரிகளுக்கு ரூபா. 460,000 திட்டமிடல் குழு படிகள்' கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது. | பி.ப.4.15இற்கு வெளியேறுதலை அடையாளமிட்ட பின்னர் மீண்டும் கைவிரல் அடையாள இயந்திரத்தில் அல்லது அலுவலக வரவுப் பதிவேட்டில் கையொப்பமிடப்படாத அதேவேளை, வெளியேறுவதற்கான கையொப்பம் குழு கையொப்பமிடல் பதிவேட்டில் பதியப்படுவதுடன், குழு குறிப்புப் புத்தகம் பரிசீலனை செய்யப்பட்டு குழு கொடுப்பனவு வழங்கப்படுவதெனவும் | சுற்றுநிரூப அறிவுறுத்தல்களுக்கு அமைவாக செயற்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 83,770,465 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,020,107 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் மூலம் | 2022 மதிப்பிடப்பட் ட வருமானம் | பட்டியலிடப்ப ட்ட வருமானம் | சேகரிக்கப்பட் ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2021 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்ப ட்ட வருமானம் | பட்டியலிடப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | வீதவரியும் வரியும் | 27,214,820 | 26,089,341 | 26,922,888 | 17,753,093 | 27,198,656 | 26,369,005 | 22,267,926 | 18,586,640 |
| (ii) | வாடகை | 1,117,932 | 2,124,463 | 2,181,263 | -- | 696,332 | 855,600 | 2,056,988 | 56,800 |
| (iii) | அனுமதிப்பத்தி ரக் கட்டணங்கள் | 2,215,750 | 2,409,812 | 7,566,885 | 58,249 | 3,643,720 | -- | 9,667,982 | 5,215,322 |
| (iv) | ஏனைய வருமானம் | 128,011,372 | 112,908,692 | 127,782,436 | 141,781,336 | 79,367,000 | 17,385,087 | 122,521,595 | 156,655,080 |
| | மொத்தம் | 158,559,874 | 143,532,308 | 164,453,472 | 159,592,678 | 110,905,708 | 44,609,692 | 156,514,492 | 180,513,842 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **வீதவரி மற்றும் வரி** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31ஆம் திகதியன்று நிலுவையாகவிருந்த ரூபா. 17,738,021 வீதவரி நிலுவைத் தொகையில் ரூபா. 5000 இனை விஞ்சிய 477 சொத்துக் கூறுகளின் நிலுவை ரூபா. 4,481,843 காணப்பட்டது. | நடமாடும் சேவை நடாத்தப்பட்டு வீதவரி நிலுவையினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருடாந்த பட்டியலிடலின் ஊடாக 75 வீதத்திற்கும் அதிகமான வருமானம் ஈட்டப்பட்டுள்ளதென | சட்டத்தின் பிரமாணங்களுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் மாகாணசபை பிரதான செயளாலர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,917,536 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 119,305,596 ஆன தொயும் பெறவேண்டியிருந்தது. | நீதிமன்ற தண்டப்பணம் நிலுவையாக இல்லை எனவும் முத்திரை கட்டணத்தினை அறவிடுவதற்காக குறித்தநிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதெனவு ம் | நிலுவையினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.3 மிகை அறவீடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபைச் சட்டத்தின் விதிமுறைகளுக்கு அமைவாக பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் கடந்த வருடங்களில் அமுல்படுத்தப்பட்ட | குறித்த அங்கத்தவர்களுக்கு இத் தொகையினை மீளச் செலுத்துமாறு அறிவித்து கடிதம் அனுப்பப்பட்டுள்ள போதும், இதுவரை எந்தவித | சட்டத்தின் பிரமாணங்களுக்கு அமைவாக மிகை அறவீட்டுத் தொகை அறவிடப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| மிகை அறவீடுகளுக்காக கடந்த ஆண்டு ரூபா. 262,608 ஆன தொகை விதிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதித் தினமன்று அத் தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொகையும் செலுத்தப்படவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் விதிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 28 விடயங்களை நிறைவேற்றுவது தொடர்பில் உப விதிகள் அமுல்படுத்த வேண்டியிருந்தும் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியாகும் போது எந்தவித உப விதிகளும் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை | 2022 திசெம்பர் 31ஆம் திகதி வரை உப விதிகள் பிறப்பிக்கப்படவில்லை என | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும |
| (ஆ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் மாதாந்தம் சேகரிக்கப்படும் கழிவு 144 டன்களாக உள்ளதுடன், சபையின் ஊழியர்கள் மற்றும் டிரக்டர் வண்டிகளை உபயோகித்து அவற்றை சேகரித்து உக்கலடையக்கூடிய கழிவுகளை குண்டசாலை திண்மக் கழிவு மத்திய நிலையத்திற்கும் உக்கலடையாத கழிவுகள் அக்குறனை பிரதேச சபைக்கும் கையளிக்கப்படுவதுடன்,இரசாயனப் பசளை தயாரித்தல் மற்றும் வருமான ஈட்டல் தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. | இரசாயனப் பசளை தயாரிப்பதற்கான இடம் காணப்படாமை இதற்கான காரணம் என | தேவைகள் பூர்த்தி செய்து கொள்ளப்படல் வேண்டும் |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) சட்டம் 178 இற்கமைவாக விலைமனுக் கோரல் விதிமுறைகளுக்கு முறனாக பேராதெனிய – கொழும்பு வீதியில் அமைந்துள்ள 05 கடைகள் 40 வருடங்களுக்கும் மேலாக தொடர்ந்தும் குறிப்பிட்ட நபர்களுக்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தது. அதேபோன்று வாடகைதாரர்கள் கடைகளின் பின்புறமாக சட்டவிரோத நிர்மாணங்களையும் மேற்கொண்டிருந்தனர். | 2023 ஆம் ஆண்டிற்காக பெறப்பட்ட புதிய மதிப்பீட்டிற்கு அமைவாக கடைகளுக்கான விலைமனுக் கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போது, கடை உரிமையாளர்கள் முறைப்பாடு செய்துள்ளனர். அதனடிப்படையில் முறைப்பாடு விசாரனை செய்யப்படும் வரை 2023.12.31 வரையிலும் புதிய மதிப்பீட்டின் அடிப்படையில் கடை உரிமையாளர்களிடமிருந்து மாதாந்த வாடகை அறவிடப்படுகின்றது என | விலைமனுக் கோரல் விதி முறைகள் பின்பற்றப்பட்டு கடைகள் வழங்கப்பட வேண்டிய அதேவேளை சட்டவிரோத நிர்மாணங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் பெற வேண்டிய 03 வகையான கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா. 20,548,004 ஆகவிருந்தது. இது தொடர்பான கால மீளாய்வின் அடிப்படையில் 01 தொடக்கம் 05 வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்திற்கான கணக்கு மீதி ரூபா. 3,643,032 ஆகவும் 05 வருடங்களை கடந்த கணக்கு மீதி கூட்டுத்தொகை ரூபா. 16,727,747 ஆகவும் காணப்பட்டது. | இம் மீதிகள் தொடர்பாக மேற்கொண்டு நடவடிக்கை எடுத்து அது தொடர்பாக கணக்காய்விற்கு அறிக்கை சமர்ப்பிப்பேன் என | பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2022 திசெம்பர் 31 ஆம் திகதியன்று காணப்பட்ட 02 கடன்கொடுத்தோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா. 82,626,910ஆக இருந்தது இதில் 01 தொடக்கம் 05 வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்திற்கான கணக்கு மீதி ரூபா 50,051,100 ஆகவும் 05 வருடங்களை கடந்த கணக்கு மீதி கூட்டுத்தொகை ரூபா. 5,539,639 ஆகவும் காணப்பட்டது. | இம் மீதிகள் தொடர்பாக மேற்கொண்டு நடவடிக்கை எடுத்து அது தொடர்பாக கணக்காய்விற்கு அறிக்கை சமர்ப்பிப்பேன் என | செலுத்த வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2019 முதல் 2021 வரையான காலப்பகுதியினுள் ரூபா. 13,915,000 பெறுமதியான ஒப்பந்தம் செய்யப்படாத 57 திட்டங்கள் தொடர்ச்சியாக கடன் கொடுத்தோர் என நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தது. | கட்டிடப் பொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் சீமெந்து தட்டுப்பாடு காரணமாக நிறைவு செய்ய முடியவில்லை. | ஒப்பந்தம் செய்யப்பட்ட அல்லது பொருந்திய திட்டங்களுக்காக கடன்கொடுத்தோர் செய்யப்படல் வேண்டும். |

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1978 ,ன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் 22 இன் பிரகாரம் சமூக மற்றும் களியாட்ட நடவடிக்கைகளுக்காக பொருத்தமானஇடங்களில் இருந்து ஒதுக்கப்படவேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதும் பிச்சமல்வத்த பிரிக்கப்பட்ட காணியின் பொது நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட முடியாத பள்ளத்துடன் கூடிய 41 ஆம் இலக்க பகுதியில் 37.3 மூன்று பேர்ச் மற்றும் 42 ஆம் பகுதியில் 37.9 பேர்ச் அளவிலான காணி சபைக்கு கையளிக்கப்பட்டு இருந்தது | இது தொடர்பாக விடயங்களை ஆராய்ந்து பார்த்து கணக்காய்விற்கு அறிக்கையிடுவதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் பொருத்தமான காணி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | கடந்த 05 ஆண்டுகளில் 1456 கட்டிட அபிவிருத்திவிண்ணப்பங்கள் கிடைத்திருந்ததுடன் அதில் 1200 அனுமதிப்பத்திரங்கள் அங்கீகரிக்கப்பட்டு இருந்தன 1052 இற்கு இணைக்கச் சான்றிதழ்கள் வழங்கப்படாது இருந்ததுடன் அங்கீகரிக்கப்படாத விண்ணப்பங்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் காணப்பட்ட கோவிட் தொற்று மற்றும் பொருளாதார நிலைமை அடிப்படையில் அதிகமானோர் 3 ஆண்டுகளுக்கு மேல் விண்ணப்பங்களை நீடிப்பு செய்திருந்ததாகவும் 2021 மற்றும் 2022வரை இதுவரை மூன்று ஆண்டுகள் கடந்து இருக்காதால் அதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | இணக்கச் சான்றிதழ் வழங்க வேண்டியதுடன் பின் தொடர் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவேண்டும் |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபை பயன்படுத்துகின்ற ரூபா 27,587,123 ஆன 10 காணிகள் மற்றும் பெறுமதி கணக்கிடப்படாத இருந்து 05 காணிகளை உரித்து கையேற்கப்பட்டிருக்கவில்லை | தற்போது கணிப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் பெரும்பகுதி உறுதிப்படுத்தப்பட்டு கணக்காய்வுக்கு தகவல் சமர்ப்பிப்பதாக | காணி கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) ரூபா 1,462,252 கூட்டுத்தொகையான கம்பெக்டெர் டெய்லர் மற்றும் 171 நீர் உபகரணங்கள் என்பன 5 ஆண்டு காலமாக விளைற்றும் குறைபாட்டுடனும் காணப்பட்டன. | கம்ப்யூட்டர் டேலர் செயற்பாடற்று உள்ளதாகவும் நீர் உபகரணங்களை ஏல விற்பனை செய்வதற்காக மீண்டும் வழங்கப்பட்டுள்ளதாக | திருத்தம் செய்யக்கூடிய மற்றும் வாகனங்களை திருத்துவதற்கும் ஏனைய வாகனங்களை கைதவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (இ) சபை அதிகார பிரதேசத்தில் காணப்பட்ட காணிகளில் ஏல விற்பனைகளில் பொது நடவடிக்கைகளுக்காக கையேற்கப்பட்ட ரூபா 20,903,251 பெறுமதியான 09 காணித் துண்டுகள் மற்றும் பெறுமதி கணக்கிடப்பட முடியாத 05 காணித்துண்டுகள் என முழு அளவு 06 ஏக்கர் 03ரூட் மற்றும் 32 பேர்ச் அளவிலான 14 காணிப் பகுதிகள் பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமல் விளைற்ற காணப்பட்டன. | எதிர்காலத்தில் பொது தேவைகளை கருத்தில் கொண்டு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | காணி பொது நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். |

### 3.5 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வண்டு ஜுலை 11 ஆம் திகதி வரை திகதி ரூபா 1,132,000 செலவிட்டு ரூபா 1,970 வீதம் 20 ஒரேன்ஜ் வகையிலான 600 மீள்ஒளிரும் (LED )மின் குமிழ்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன இந்த மின் உபகரணங்கள் தொடர்பான குறித்த கோவையை பரிசீலிக்கும் போது விலைகோரப்பட்டமைக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாத இருந்ததுடன் பெறுகை மற்றும் தொழில்நுட்ப குழு குழு அறிக்கைகள் இன்றி கொள்வனவு இடம்பெற்றுள்ளது கணக்காய்வினால் மேற்படி மின்குமிழ்களை கொள்வனவு செய்யப்பட்ட நிறுவனத்திடமிருந்து 2023 ஏப்ரல் 27 ஆந் தேதி பெற்றுக்கொண்ட விலை விபரங்களின் பிரகாரம் 2 வருடகால உத்தரவாதத்துடன் இது வந்து குவோட் வொட் 20 ஒளிரும் மின்குமிழ்கள் (LED) மின் விலக்கின் (குமிழ்) விலை ரூபா 1,650 என | கொள்வனவு செய்யும் போது பெறுகை குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை பெற்றுக் கொள்வதாக | இது தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு கணக்காய்வு அறிக்கை இடப்பட வேண்டும் |

அவதானிக்கப்பட்டதால் அசாதாரண விலை விவரங்களைப் பெற்றுக்கொள்ளப்பட்டு ரூபா402,000ஆன நட்டம் ஒன்றை சபை நிதியத்திற்கு ஏற்படுத்தப்பட்டிருந்தது அந்த வகையில் 2023 மார்ச் 23 ஆம் தேதி ரூபா 1,200,100 கூட்டுத் தொகையை செலவழித்து ரூபா 2,000 வீதம் 600 மின்குமிழ்கள் கொள்வனவு செய்யப்பட்டு இருந்தன

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியுடன் ஒப்பிடும் போது 03 பதவிகளில் வெற்றிடங்களும் 12 மிகைகளும் காணப்பட்டன. | 12 அபிவிருத்தி உதவியாளர் இந்த அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டுள்ளதால் அவை மிகை என்தாகவும் வெற்றிடங்கள் தொடர்பாக உரிய நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். அத்துடன் பதவிகள் அங்கீகரித்துகௌள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு இடமாற்றம் பெற்றுச் சென்ற, ஓய்வுபெற்ற மற்றும் வேலை இடை நிறுத்தம் செய்யப்பட்ட மற்றும் வேலையை விட்டுச் சென்ற,31 உத்தியோகத்தர்களிடமிருந்தும் மொத்தம் ரூபா 1,927,922 ஆன கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. | இடமாற்றம் பெற்றுச் சென்ற,உத்தியோகத்தர்களின் கடன் மீதி தொடர்பாக உரிய நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் கடன் மீதிகளைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | ஊழியர் கடன்கள் அறவிடப்பட வேண்டும். |
| (இ) | பதவி அங்கீகரிக்கப்படாத நாளாந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட 07 ஊழியர்களின் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் செலுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டு கழிக்கப்பட்ட ரூபா 448,071 தொகை பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது | இந்த ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்ள முடியாது இருப்பதால் சேமலாப நிதிய சட்டத்தின் பிரகாரம் பங்களிப்பை அறவிடுவதற்கு முடியாது என | விரைவில் தீர்வு செய்யப்பட வேண்டும் அமைய மற்றும் தற்காலிக ஊழியர்களுக்கு அரச சேவை சேமலாப நிதியத்திற்கு அங்கத்துவம் வழங்கப்பட வேண்டும் |